# சிலப்பதிகாரக்கதைக்களமும்– வினைப்பயனும்

*முனைவர் க. குமரகுருபரன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி
பசுமலை, மதுரை

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5033

**கட்டுரை சுருக்கம்**

*சிலப்பதிகாரம் அதிகமான கிளைக்கதைகளை உடைய காப்பியமாகும். கிளைக்கதைகள் காப்பிய நகர்விற்கு உறுதுணையாக அமைகின்றன. சிலப்பதிகாரத்தில் அமையும் பல்வேறு கிளைக்கதைகளே கதைக்களமாக அமைகின்றது. பல்வேறு கிளைக்கதைகள் வினைப்பயனை முதன்மைப்படுத்துகின்றது. முற்பிறவியில் செய்த கருமப்பலனே மறுபிறவியின் வினைப்பயனாக அமைகின்றது. கோவலன், கண்ணகியின் வினைப்பயனே காப்பியத்தின் மையப்பொருளாக அமைகின்றது. காப்பிய கதாப்பாத்திரங்களின் வினைப்பயனே காப்பியநகர்விற்கு முதன்மையாக அமைகின்றது.*

## முன்னுரை

சிலப்பதிகார கதைப்பயணத்திற்கு வினைப்பயன் காரணமாக அமைவதை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். கோவலன், கண்ணகியின் முற்பிறவி வினையின் காரணமாக இவ்வாழ்வு நிகழ்வதாக கதைக்களத்தினை அமைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி திருமண வாழ்வு தொடங்கி, பிரிவு, கோவலன், மாதவி பரத்தமை வாழ்வு, பிரிவு என்று அனைத்து நிலைகளையும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்று குறிப்பிடுகிறார். வினைப்பயன் என்பது காப்பிய நகர்வின் ஒட்டுமொத்த மையநிலையாகும். வினைப்பயனை விளக்கும் வகையில் பல சிற்சில கிளைக்கதைகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றன. இக்கதைகளே சிலப்பதிகாரத்தின் மையமாகவும் பாத்திரங்களின் பண்புநலங்களை விளக்கும் வகையில் அமைகின்றன.

## சிலப்பில் அறக்கொள்கை

மனிதன் பிறருக்கு உதவ வேண்டும் என்பதே முன்னிறுத்துவதே அறம் எனப் பொருள்படுகின்றது. அனைத்து சமயங்களுமே ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. சமணர்கள் தன் விரத நாட்களில் பிறருக்கு உதவி செய்கின்றனர். மூன்று அறக்கொள்கைகளை சிலப்பதிகாரம் முன்வைக்கின்றது. அவை

*1. அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதும்*
*2. உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்*
*3. ஊழ்வினை உருத்துவந் தூட்டும்*

என்று மூன்று அறக்கொள்கையும் வினைப்பயன் கருதியே சிலப்பு கட்டமைத்துள்ளது. மனிதன் தங்கள் வாழ்வினை செம்மையுற அமைத்துக்கொள்ள இம்மூன்று அறக்கொள்கையும் கடைப்பிடித்து, மனதில் நிலைநிறுத்தி வாழ்தல் அவசியம் என்று குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரத்தின் கதைக்களம் எனும் போது அனைத்துக் கிளைக்கதைகளிலும் வினைப்பயனே முதன்மைப்படுத்தப்படுகின்றது. மனிதனின் வாழ்வில் அவனின் கருமப்பலனே முதன்மைப்படுத்தப்படுவதுடன், அவனது பின் ஜென்ம வாழ்விற்கு அதுவே கருவியாக வந்தமைவதை விளக்க முற்படுகின்றது சிலப்பதிகாரக் கதைகள் என்பது தெளிவாகின்றது.

**வினைப்பயன்**

பொழில்கள் சூழ்ந்த நாடு கலிங்க நாடு, அந்நாட்டில் வசு, குமரன் என்ற இரு வேந்தர்கள் இருந்தனர். குமரன் காடுகள் நிறைந்த கபில புரத்தை ஆண்டுவந்தான். அவர்களுக்குள் பகை ஏற்பட்டது அவர்களுடைய நகரங்களுக்கு இடைப்பட்ட ஆறு காத தொலைவிற்கு போர் நிகழ்ந்து வந்தன. ஆதலின் அவ்வழியே செல்வோர் எவரும் இல்லை.கபில புரத்தில் வாழ்ந்தவன் சங்கமன். அவனது மனைவி நீலி. அவன் செல்வம் சேர்க்க விரும்பினான். மிக்க விலையுள்ள அணிகலன்களையெல்லாம் விற்று பொருள் பெற்று தொழில் மேற்கொள்ள, அவற்றைச் சுமந்து கொண்டு சிங்கபுரம் சென்றான். சிங்கபுரம் கடைவீதியில் தனது அணிகலன்களை விற்றுக்கொண்டிருந்தான்.

சிங்கபுரத்து அரசனிடத்தில் அரசுபணி செய்து கொண்டிருந்தான் பரதன். சங்கமன் அணிகலன்களை விற்று கொண்டிருந்ததைக் கண்டான் பரதன். கொல்லா விரதத்திலிருந்து நீங்கியமை காரணமாகப் பரதனுக்கு சங்கமன் மீது முன்பே பகையுணர்வு இருந்தது, அப்பகையின் காரணமாக பரதன் சங்கமனை நாட்டின் ஒற்றன் எனக் கூறி தன் அரசனிடம் காட்டிக் கொடுத்தான். பரதன் கொல்லப்பட்டான். சங்கமன் கொல்லப்பட்டதால், அவனது மனைவியான நீலீ, வருத்தத்தினால் தனக்கு நிலைக்களங் காணாதவளானாள். சிங்கபுரத்துத் தெருக்களின் வழியே அரண்மனையை அடைந்தாள்.

"அரசர்களே என் கணவனை கொன்றது முறையோ? வணிகர்களே இச்செயல் முறையோ? ஊர் வாழ் மக்களே, சேரி வாழ் மக்களே, உங்கள் அரசனின் செயல் முறையோ?"[1] என்று புலம்பி அரற்றினாள். இவ்வாறு 14 நாட்கள் சென்றன. வானத்தின் கண் ஏறுவதற்குரிய ஏணியைப் போன்று விளங்கிய நெடியதொரு மலை உச்சியில் ஏறினாள் கொலை வாய்ப்பட்ட தன் கணவனுடன் கூடுவதற்கு முற்பட்டு காத்து நின்றாள். "எம்மை இப் பெருந்துயரம் அடையுமாறு செய்தோர் இச்செயலின் காரணமாகப் பெறுகின்ற துன்பமும் இவ்வளவு பெரிதாகட்டும்"[2] என்று அவள் அப்போது சாபமிட்டாள் பின்னர் மலை உச்சியிலிருந்து விழுந்து உயிர் நீத்தாள்.

குற்றமில்லாத நீலியினது சாபத்தின் பயனை பரதன் அடைந்தான். அவன் மறுபிறவியில் கோவலன் என்ற பெயரிலும் அவனது மனைவி கண்ணகி என்ற பெயரிலும் தோன்றினார். குற்றமற்ற கோவலன் பொற்கொல்லனது சூழ்ச்சியால் கள்வனாகக் கருதப்பட்டான். மனைவி கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல என்று மெய்ப்பித்தாள். ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சியை மதுராபதி எனும் காவல் தெய்வம் கண்ணகிக்கு நினைவூட்டியது. கோவலன் கண்ணகியின் முற்பிறவி வினைப்பயனே காப்பியத்தின் மையக்கரு என்பது இக்கிளைக்கதையின் வழி புலப்படுகின்றது.

**சாத்தனும் தேவந்தியும் - கோயில்களில் வழிபாடு**

முன்பொரு காலத்தில் மாலதி என்ற பெயர் கொண்ட ஓர் அந்தண பெண்மணி தனது மாற்றாள் பெற்ற குழந்தைக்குப் பாலாடையில் பாலூட்டினால் அப்போது விக்கல் ஏற்பட்டது. குழந்தை இறந்துவிட்டது, தனது கணவனும் மாற்றாளும்தன்னைத் தூற்றி அடாத பழி சுமத்துவார்களே என்றும் அதற்கு என்ன செய்யலாம் என்றும் ஏங்கினாள். குழந்தையைக் கைகளில் ஏந்திக் கொண்டு அனைத்து கோயில்களுக்கும் சென்று தெய்வங்களை இறைஞ்சி வேண்டினாள். தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தை போக்குமாறு தெய்வங்களை வேண்டினாள் எந்த ஒரு தெய்வமும் அவள் துயர் தீர்த்திட முன் வரவில்லை எனவே மீண்டும் பாசண்டச் சாத்தன் என்ற அய்யனார் கோயிலுக்குச் சென்று அங்கும் தனது துயரை கூறி வரம் கேட்டாள்.

சுடுகாட்டில் பிணம் தின்று வாழ்வது இடாகினிப் பேய். அந்த இடாகினிப் பேய் ஒரு அழகிய பெண் வடிவில் தோன்றி வரம் கேட்ட மாலதியின் முன்பு சென்றது. அவளிடம், "செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரங்கொடார்"[3] என்ற மூதுரை பொய்யாகாது. எனவே குழந்தையை தன்னிடம் தருமாறு கேட்டாள் அப்பேய் மாலதியிடமிருந்து குழந்தையை வலிய பறித்து கொண்டது பிறகு அடர்ந்த இருளில் சக்கரவாளக் கோட்டத்திற்கு சென்று அக் குழந்தையை விழுங்கிவிட்டது.

இதனால் பெருந்துயர் கொண்ட மாலதி அழுதாள். அவள் மீது இரக்கம் கொண்ட "சாத்தன்" என்னும் தெய்வம் அவளைத் தேற்றியது. மேலும் அவள் செல்லும் வழியில் ஒரு மாஞ்சோலையில் மரநிழலில் அக்குழந்தையை உயிருடன் காண்பாய் என்று கூறியது. பிறகு அந்த தெய்வம் தானே குழந்தையாகி மாமரத்து நிழலில் கிடந்தது. அவ்வழியில் பயணித்த மாலதி, சிறிதும் ஐயமின்றி அம்மாயக் குழந்தையை அன்புடன் எடுத்து கொண்டாள். பிறகு அக்குழந்தை தனது மாற்றாளிடம் ஒப்படைத்தாள்.

சாத்தனாகிய அக்குழந்தை நன்கு வளர்ந்தது. தந்தையாகிய தூய மறையோனுக்கு வழித்தோன்றலாகி, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். தாயும்,தந்தையும் இறந்த பின்னர் அவர்களுக்கு செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்தான். பிறகு தன் மனைவியோடு எட்டாண்டுகள் இல்லறம் நடத்தினான். சாத்தானின் மனைவி "தேவந்தி" அவளுக்குத் தன் தெய்வத் தன்மையை உணர்த்த சாத்தன் விரும்பினான் தன்னுடைய தெய்வ வடிவின் மூவாத இளநலத்தையும் பேரொளியையும் அவளுக்குக் காட்டினான் பிறகு "நீ எமது கோயிலுக்கு வந்து எம்மை காண்பாயாக"[4] என்று கூறி அவனை விட்டு நீங்கினான்.

என் உள்ளங் கவர்ந்த என் கணவர், புண்ணிய தீர்த்தங்கள் எங்கும் சென்று ஆடி வருவேன். என்று சொல்லி என்னைப் பிரிந்து போயிருக்கிறார். அவர் மனதை மாற்றி மீண்டும் என்னுடன் சேர்த்து வைக்க வேண்டுமென்று வழிபட செல்வதாக ஒரு போலிக் காரணத்தைக் காட்டி நாள்தோறும் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து வந்தாள். தேவந்தி கண்ணகியின் நெருங்கிய தோழியாக இருந்தாள். கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்த காலத்தில் கண்ணகிக்காக வழிபாடு செய்தாள். சாத்தன் கோயிலுக்கு செல்லும்போது தனக்காக எதுவும் வேண்டாமல், கண்ண கியின் துன்பம் தீர்தல் பொருட்டு, அருகம்புல்லையும், சிறுபூளைப் பூவையும் நெல்லோடு விரவித்தூவி வழிபாடு செய்தாள். "என் தெய்வமே என் தோழி கண்ணகியின் துயர் துடைத்து அருள்வாயாக" என்று வேண்டினாள் பிறகு கண்ணகியிடம் சென்று 'நீ உன் கணவனோடு மீண்டும் சேர்ந்து வாழ்வு பெறுவாயாக'[5] என்று வாழ்த்தினாள்.

வாழ்த்திய தேவந்தியை நோக்கி, பெண்ணே நீ வாழ்த்தியதைப் போலவே நான் என் கணவனை பெறுவேன். ஆயினும் நேற்று இரவு விடியற்காலையில் யான் கண்ட ஒரு கனவினால் எனது நெஞ்சம் கவலையுறுகிறது. கனவில் என் கணவர் என்னை விரும்பி வந்து அன்புடன் கையைப் பற்றினார். இருவரும் ஒரு பெரிய நகரத்தில் புகுந்தோம், அங்கே அவ்வூரினர் எங்களுக்குப் பொருந்தாத ஒரு பொய்யான பழியைச் சுமத்தினர். கோவலனுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டது என்று சிலர் என்னிடம் கூறினார். அதனைக் கேட்ட நான் அந்நாட்டு அரசன் முன்னர் சென்ற வழக்குரைத்தேன். மன்னனுக்கும் மக்களுக்கும் தீங்கு ஏற்பட்டது, அத்தீங்கு யான் செய்த கொடிய குற்றத்தினால் ஏற்பட்டது போல் தோன்றுகிறது. அதை உனக்கு யான் உரைக்க விரும்பவில்லை இவ்வாறு கண்ணகி தேவந்தியிடம் கூறினாள்.

கண்ணகி உரைத்ததைக் கேட்ட தேவந்தி கண்ணகியைத் தேற்றினாள். முற்பிறவியில் கணவர் பொருட்டு மேற்கொள்ளும் நோன்பில் தவறு செய்துள்ளதால் கண்ணகிக்கு இப்பிரிவுத்துயர் ஏற்பட்டது போலும் என்று கூறினாள். மேலும் துயரிலிருந்து விடுபட ஒரு நேர்த்திக் கடனையும் தெரிவிக்கிறாள். அதன் படி கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்தில், கூடல் முகத்திற்கு அருகில் உள்ள நெய்தல் நிலத்துக் கானலில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற இரு நீர்நிலைகளில் மூழ்கி காமவேள் கோயிலை அடைந்து தொழுதால் கணவனை பிரியாத பேரின்ப நிலையை எய்தலாம், தன்னுடன் வந்தால் இருவரும் அப்பொய்கைகளில் மூழ்கி வழிபடலாம் என்று தேவந்தி கூறினாள். ஆனால் கண்ணகி அவ்வாறு செய்தல் தங்களுக்கு இயல்பன்று என்று கூறி மறுத்து விடுகிறாள்.

அப்பொழுது குற்றேவல் சிலதி கோவலன் வருகையைக் கண்ணகியிடம் தெரிவித்தாள். கண்ணகியைக் கண்ட கோவலன் வஞ்சகமும், பொய்மையும், மாயையும் நிறைந்தவளோடு சேர்ந்து இருந்தமையால் முன்னோர் தேடிய செல்வம் எல்லாம் தொலைந்து நல்குரவு (வறுமை) ஏற்பட்டுள்ளது. அதுவே தனக்கு நாணைத் தருகின்றது என்று கூறினான். மாதவியோடு வாழப்பொருள் தேவை என்று கோவலன் வருந்துவதாகக் கருதிய கண்ணகி, தன்னிடம் கூடுதலாக ஒரு இணை சிலம்பு இருப்பதாகவும் அதனை எடுத்துக் கொள்ளுமாறு கூறுகிறாள்.

கோவலன் அச்சிலம்பைத் தான் வாணிகத் தொழிலுக்கு முதலாகப் பயன்படுத்தவும், மதுரை நகருக்குச் சென்று இழந்த பொருளை ஈட்டவும் முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தான். கண்ணகியை தன்னோடு மதுரை வருமாறு அழைத்தான்.

**“சேயிழைகேள் இச்சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு**
**உலர்ந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்த சீர்**
**மாட மதுரை யகத்துச் சென்று என்னோடு இங்கு**
**ஏடு அலர் கோதாய் எழுக”**

**(சிலம்பு - 9.74-77)**

மறுநாள் கதிரவன் எழும் முன்பே இருவரும் மதுரையை நோக்கி பயணித்தனர். “மாண்டார் மீளார்” “நம்பினோர் கைவிடப்படார்” என்ற நீதி இக்கதையால் விளக்கம் பெறுகிறது. இக்கிளைக்கதையில் கண்ணியின் தோழியின் வினைப்பயன் செல்லப்பட்டதுடன், கண்ணியின் ஊழ்வினையின் உச்சம் வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

### கருணை மறவன் - வாரி வழங்குதல்

அழகிய மேகலை என்ற அணியை அணிந்துள்ள கணிகையர் பலரும் ஒன்று கூடி விழா எடுத்து மாதவியின் மகளுக்கு மணிமேகலை என்ற பெயர் சூட்டினார். விழாவில் குழந்தையையும் நாட்டு மன்னனையும் வாழ்த்தினர். குழந்தையின்

நலன் கருதி கோவலன் மாதவியின் மகளுக்காக பொன்னையும் பொருளையும் வாரி வாரி வழங்கினான். வீட்டுலகினை அடைவதற்கு நன்னெறியாகிய மெய்யுணர்வினாகத் தோற்றமளிக்கும் அந்தணன் ஒருவன் வந்தான். அவன் மூப்பினால் வளைந்த உடம்பையும், தளர்ந்த நடையையும் உடையவனாய், கோலினைக் காலாக ஊன்றியவாறு கோவலனிடம் பொருளைப் பெறுவதற்காக விரைந்து சென்றான்.

அவ்வாறு வந்தவனை மதங்கொண்டு பாகர்களின் கட்டுக்குள்ளிருந்து விலகி யானை ஒன்று நெருங்கியது. அது கண்டவாறு திரிய தொடங்கியது அதனால் கேடு விளையும் என்று கருதி யானையின் வருகையைக் குறித்து மக்களுக்குப் பறையறை அறிவித்தனர். அந்த யானை அம்முதிய மறையவனைச் சினத்துடன் துதிக் கையினால் பற்றியது, அது கண்ட கோவலன் விரைந்து "ஓய்" என்று கூறி யானையின் அருகில் சென்று அதன் பிடியிலிருந்து அம்மறையவனை விடுவித்து, தான் அதன் பிடியில் அகப்பட்டான். பின் அங்கிருந்து அகன்று அதன் கொம்புகளை (தந்தங்களை) மிதித்து ஏறி, கருத்த யானையின் பிடரியில் ஏறி அமர்ந்து கொண்டான். கரிய பெருங்குன்றின் மீது இருக்கும் விஞ்சையனைப் போல தோற்றமளித்தான், யானையின் செருக்கினை அடக்கினான். சினம் கொண்ட களிற்றை அடக்கினான், அந்தணனையும் மக்களையும் காத்தான். இத்தகைய கருணை நிரம்பியவன் கோவலன் என்றும் மாடலன் கூறினான்.

## முடிவுரை

பாண்டிமாதேவி கண்ட கனவும் நிமித்த கணவே "செங்கோலும் வெண்குடையும் செறி நிலத்தில் மறிந்து வீழ்தரும் நங்கோ தன் கொற்ற வாயில் மணி நடுங்கும் உள்ளம் இரவில்லிடும் பகல்மீன் இருநான்கு திசையும் அதிர்ந்திடும் வருவதோர் துன்பமுண்டு மன்னவர்க்கு யாம் உரைத்தது ம்சுஎனக் கோப்பெருந்தேவி தன் தீக்கனவின் திறம் உரைத்தாள். இக்கனவில் அரசியலில் இயல்பாக நடைபெறாத நடைபெறுவதாக அமைந்த ஒரு பகுதியும், குடையோடு கோல் வீழலும் வாயிற் கடைமணி நடு நா நடுங்கலும் வானில் ஏற்படும் மாற்றங்களான இன்னொரு பகுதியும் திசை அதிர்தல், கதிரை இருள் விழுங்கல், பகலில் தோன்ற வேண்டிய வானவில் இரவில் தோன்றுதல், விண்மீன்கள் பகலில் வீழ்தல் என்ற பகுதியையும் காணமுடிகிறது இங்கு இயற்கை நிகழ்ச்சிகள் முரண்பட்டு நிகழும் தோற்றமும் கனவு பொருளாகி இருக்கிறது. மூவகை கனவுகள்முனைவர் ச.வே.சு குறிப்பிடுவதாவது, கண்ணகி கண்டது முழுக்கனவு என்றும், கோவலன் கண்டது தனிக்கனவு என்றும், பாண்டிமாதேவி கண்டது பொதுக்கனவு என்று வினைப்பயன் காரணமாகவே சிலப்பதிகார காப்பியம் அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. சிலப்பதிகாரம், ஞா.மாணிக்கவாசகன்,
2. சிலப்பதிகாரக் கதைகள், முனைவர் வி.இராம்தாஸ், பக்.8
3. சிலப்பதிகாரக் கதைகள், முனைவர் வி.இராம்தாஸ், பக்.10
4. சிலப்பதிகாரக் கதைகள், முனைவர் வி.இராம்தாஸ், பக்.11
5. சிலப்பதிகாரக் கதைகள், முனைவர் வி.இராம்தாஸ், பக்.12